1995 ஏப்ரல் 5]

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எமரால்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அந்த அட்டுப்பாய் கிராமம் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த அட்டுப்பாய் கிராமத்தில் இருக்கிற மக்கள் அந்த எமரால்டு பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருக்கின்ற காரணத்தால் அது மிகவும் அருகில் இருக்கிற ஒரு சங்கமாக இருக்கின்ற காரணத்தால் புதிதாக சங்கம் அமைக்க வாய்ப்புகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 230, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வணிகவரிகள்துறை அமைச்சர்.

230—

குடிசைத் தொழில் பொருள்களுக்கு வரிகளை ரத்து செய்தல்

20750*—திரு. ஆர். சிங்காரம்:**

மாண்புமிகு வணிகவரிகள்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடிசைத் தொழில் மூலம் தயார் செய்யும் ஓடு, செங்கல் தொழிலுக்கு விற்பனை வரி, ஏனைய வரிகளை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிகவரிகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குடிசைத் தொழில் மூலமாக செங்கல் தயாரிக்கின்ற ஏழை சாதாரண விவசாயக் கூலிகள் 6 மாதம் குளிர்காலத்தில் விவசாயம் செய்தது போக மீதம் கோடைக்காலங்களில் மேட்டுப் பாங்கானப் பகுதிகளில் குடிசைத் தொழில் போல அவர்கள் செங்கல் அறுத்து அதை கால்வாய் வைத்து சுட்டு-ஒரு வருடத்திற்கு 2 கால்வாய் வீதம் தான் முடியும்--அதை ஏற்றுமதி செய்து வெளியில் கொண்டு போய் விற்கிறார்கள். இது சாதாரண குடிசைத் தொழில். இங்கே மிஷின் வைத்து சாம்பர் கல் போல் அறுத்து வியாபாரம் செய்கிறவர்களுக்காக

நான் கேட்கவில்லை. சாதாரண ஏழைத் தொழிலாளி, விவசாயம் செய்யும் காலம் போக மற்ற நேரங்களில குடிசைத் தொழிலாக அந்தப் பகுதியில் செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக தஞ்சை மாவட்டம் திருக்காட்டுப்பள்ளி இன்னும் பல்வேறு இடங்களில் இது போன்று செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மட்டுமாவது, இந்த தமிழகத்தில் இது போன்ற குடிசைத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிற அவர்களுக்கு மட்டுமாவது, இந்த வரி விலக்கு அளிக்க முடியுமா என்று, மீண்டும் பரிசீலிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *10-35*

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நாட்டுச் சூளை மூலமாகச் செங்கல் தயாரிக்கின்ற தொழிலுக்கு ஏற்கனவே வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த வரி விலக்கு அளிக்கப்பட்ட சலுகையைத் தவறாகப் பயன்படுத்தி, பெரிய செங்கல் தொழிற்சாலைகள், மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியது போன்று சேம்பர் பிரிக்ஸில் தயாரிக்கப்படுகின்ற செங்கற்களுக்கும் வரி கட்டாமல், வரி ஏய்ப்பு செய்யும் தன்மை இருந்துவந்தது. அதைத் தவிர்க்கின்ற வகையில், ஒட்டுமொத்தத்தில் எல்லாச் செங்கற்களுக்கும் வரி உண்டு என்று திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றது. இப்படித் திருத்தியமைக்கப் பட்டாலும் ஒரு இலட்சம் ரூபாய்க்கும் குறைவாக ஒரு ஆண்டுக்கு விற்பனை இருக்குமேயானால் யாரும் வரி கட்ட வேண்டியதில்லை என்ற சலுகை இவர்களுக்கும் பொருந்தும். அந்த வகையில் குடிசைத் தொழிலாகவோ, பகுதி நேரத் தொழிலாகவோ ஒரு குடும்பத்தினுடைய அங்கத்தினர்கள் மட்டும் அந்தத் தொழிலில் ஈடுபட்டு, வேறு கூலித் தொழிலாளிகளைப் பயன்படுத்தாமல், பெரிய அளவில் அந்தத் தொழிலை லாரிகள் வைத்து வியாபாரம் செய்யாமல் இருப்பவர்கள் மீது இதுவரையில் வரி விதிப்பு செய்யவில்லை. அப்படிப்பட்ட நடைமுறையை துறை கடைபிடித்து வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுடைய விளக்கத்திற்கு மிக்க நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்: சேம்பர் கல்லை வைத்துக் கொண்டு வரி ஏய்ப்பு செய்கின்றவர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. சேம்பர்

1995 ஏப்ரல் 5]

என்றால் அவர்கள் மெஷினரிஸை வைத்து அந்தக் கல்லை ஆற வைத்து மிகப்பெரிய ஃபேக்டரியைப் போலச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், சாதரண குடிசைத் தொழில் செய்து வருகின்றவர்கள் ஏழை விவசாயக் கூலிகள், அவர்களாகவே அந்த விவசாய நிலம் வேலை நேரம் போக மீதி ஆறு மாதங்களுக்குக் கோடை காலத்தில் சும்மாயிருப்பார்கள். அவர்கள் மேட்டுப்பாங்கான விளைநிலங்களில் விவசாயிகளே கொண்டு வந்து இந்த இடத்தில் கால்வாய் போடுங்கள் என்று சொல்லுவார்கள். அந்தயிடத்தில் பள்ளம் தோண்டி, அந்த இடத்தில் செங்கல் அறுத்து, அதைச் சுட்டு ஒரு வருஷத்திற்கு ஒரு கால்வாய் அல்லது இரண்டு கால்வாய்கள் என்றுதான் போட முடியும். அதை அவர்களாகவே அவர்களுடைய மாட்டு வண்டியிலே கொண்டு போய் விற்பனை செய்கின்றார்கள். இதற்கும் அவர்கள் வரி கேட்கிறார்கள். அந்த லைசென்ஸ் வாங்குவதோடு அல்லாமல், கட்டாயப்படுத்தி வரியைக் கட்டித்தான் ஆகவேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள், என்னுடைய கேள்வி சம்பந்தமாக கணிசமான அளவிற்கு வந்திருக்கின்றார்கள். இதை இந்த மாதிரி செய்கின்றவர்களுக்கு நிச்சயமாக வரி விலக்கு உண்டு என்று அறுதியிட்டு, இறுதியிட்டு, உறுதியாக, தமிழகத்தினுடைய முதலமைச்சரவர்கள், எதையும், எந்தச் சக்தியையும் சாதித்து, வேதனையைச் சாதனையாக ஆக்கிக்கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக்காலத்தில் இதையும் செய்ய மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தமிழகத்தில் நலிவுற்றவர்களுக்கு வலுவூட்டுகின்ற நிர்வாகம்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நிர்வாகமும் ஆட்சியும். அந்த வகையில் நலிவுற்றவர்கள், மற்றும் ஏழைத் தொழிலாளிகள் குடும்பத் தொழிலாகச் செங்கல் தயாரிப்பு செய்து கொண்டிருப்பவர்கள் எவரும் இந்த வரிவிதிப்பின் மூலம் பாதிக்கப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை இந்த நேரத்தில் தருகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ப. கலியபெருமாள்.

திரு. ப. கலியபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தச் செங்கல் அறுக்கும் தொழில், பெரும்பகுதி என்னுடைய தொகுதியிலே, சாதாரண மக்கள் இந்தக் கல்லை அறுத்து வியாபாரம் செய்கிறார்கள். தஞ்சை மாவட்டம், திருச்சி மாவட்டம், பல்வேறு

அரசுத் துறைகளின் கீழ் கட்டப்படுகின்ற, வீட்டு வசதி மூலம் கட்டப்படுகின்ற கட்டிடங்களுக்கெல்லாம் இங்கேயிருந்துதான் அந்தக் கற்கள் செல்லுகின்றன. அதோடு இந்தக் கல் அறுக்கும் தொழிலினால் அங்கே ஏப்ரல், மே, ஜுன் மாதங்களிலே வேலையில்லாமல் இருக்கின்ற அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஆயிரக்கணக்கான பேர்களுக்கு இந்த வேலைவாய்ப்பை அளிக்கின்ற தொழிலும்கூட. அதோடு நிலங்களைச் சமப்படுத்துகின்ற ஒரு நிலையும், நீர்ப்பாசனத்திற்கு வேண்டிய நிலையும் ஏற்படுகின்ற காரணத்தினால், அங்கே இந்த இரண்டு மூன்று மாதங்களுக்குச் செய்கின்ற இந்தத் தொழிலுக்கு அந்த செங்கல்லை அறுக்கின்ற அவர்களுக்கு வரி விலக்கை நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் வணிகவரித் துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சரவர்கள் இதற்கு வேண்டிய நடவடிக்கையெடுத்து அந்த வரியைக் குறைப்பார்களா ; வரியில்லாமல் செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே செங்கல்லுக்கும், ஓட்டிற்கும் வரி விதிப்பு முறை எந்தவகையில் விதிக்கப்பட்டிருக்கின்றது என்பதை மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக வேண்டித்தான், ஒட்டுமொத்தத்தில் எந்தச் செங்கல்லுக்கும் எந்த ஓட்டிற்கும் வரி விலக்கு இல்லை என்ற நிலையை எடுத்திருக்கிறோமே தவிர, குடும்பத் தொழிலாக அதே நேரத்தில் குடிசைத் தொழிலாகச் செங்கல் தயாரிப்பவர்கள் மீது வரி விதிப்பது இல்லை என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

முற்பகல் 10-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 231, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

231—

செங்கம் தொகுதியில் தொழிற்பேட்டைகள் அமைத்தல்

***36049—டாக்டர் பெ. வீரபாண்டியன்:**

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) செங்கம் தொகுதி, காஞ்சி மற்றும் செங்கம் ஒன்றியம், வேடங்குப்பத்தில் தொழிற்பேட்டைகள் (சிப்காட்) அமைக்க அரசு முன்வருமா ?